


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 342 04.06.2026 THURSDAY VAIKASI : 21 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 342 04.06.2026 வியாழக்கிழமை வைகாசி : 21 விலை : ரூ.5/-

## மாநிலங்களவை உறுப்பினர் இடத்தை காங்கிரஸுக்கு ஒதுக்கியது தவெக

# “முதல்வர் விஜய் அறிவிப்பு!”

சென்னை: ஜூன்.4-

தமிழகத்தில் ஜூன் 18ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களவை உறுப்பினர் இடத்தை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்குவதாக தவெக தலைவரும், முதல்வருமான விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து தவெக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் வெளியிட்ட அறிவிப்பில், ‘இம்மாதம் 18ஆம் தேதி தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட உள்ள மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தலில், தமிழ்நாட்டில் தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு மாநிலங்களவை உறுப்பினர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது’ எனத் தெரிவித்துள்ளார்.



நாடு முழுவதும் மாநிலங்களவை எம்.பி.க்கள் 24 பேரின் 6 ஆண்டு பதவிக் காலம் 2026 ஜூன், ஜூலையில் முடிவடைகிறது. இதனால், அந்த இடங்களுக்கு ஜூன் 18ம் தேதி தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சி.வி.சண்முகம் உட்பட 3 பேர் மாநிலங்களவை எம்.பி. பதவியை ராஜினாமா செய்துள்ளனர். இதனால், 3 இடங்களுக்கு அதே நாளில் இடைத்தேர்தல் நடத்தப்படவுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மயிலம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு சி.வி.சண்முகம் வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து அவர் தனது ராஜ்யசபா எம்பி பதவியை ராஜினாமா செய்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் சிறைத் துறைக்கு மாற்றம்

சென்னை: ஜூன்.4-

தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் சிறைத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டார். புதிய டிஜிபியாக மகேஷ்குமார் அகர்வால் பொறுப்பேற்க உள்ள நிலையில் தேர்தல் ஆணையத்தால் டிஜிபியாக நியமிக்கப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர் மாற்றப்பட்டார்.

அதேபோல் சிறைத்துறை கூடுதல் டிஜிபியாக இருந்த கே.சங்கர் குற்றப்புலனாய்வுத்துறை ஏடிஜிபியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப் பெருங்கட்சியாக உருவெடுத்து பின்னர் காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, ஐயூஎம்எல் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி நடத்தி வருகிறது.

புதிய ஆட்சி அமையும் முன்னர் தேர்தலை ஒட்டி தேர்தல் ஆணையம் தமிழக டிஜிபி, தலைமைச் செயலர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் இருந்த அதிகாரிகளை மாற்றம் செய்தது.

புதிய ஆட்சி அமைந்த பின்னரும் அதிகாரிகள் மாற்றம் பெரிய அளவில் நடந்து வருகிறது.

அந்த வகையில், தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் சிறைத்துறை டிஜிபியாக மாற்றம் செய்யப்பட்டார். புதிய டிஜிபியாக மகேஷ்குமார் அகர்வால் பொறுப்பேற்க உள்ள நிலையில் தேர்தல் ஆணையத்தால் டிஜிபியாக நியமிக்கப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர் மாற்றப்பட்டு இருக்கிறார்.

அதேபோல், சிறைத்துறை கூடுதல் டிஜிபியாக இருந்த கே.சங்கர் குற்றப்புலனாய்வுத்துறை ஏடிஜிபியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## “ஆட்சி நிர்வாகம், மாநில உரிமைகளில் பங்களிப்பு…” கருணாநிதி பிறந்தநாளில் முதல்வர் விஜய் புகழாரம்

சென்னை: ஜூன்.4-

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 103வது பிறந்தநாளை ஒட்டி தமிழக முதல்வர் விஜய், “தமிழ் மொழி, இலக்கியம், திரைத்துறை, அரசியல், ஆட்சி நிர்வாகம் மற்றும் மாநில உரிமைகள் போன்றவற்றில் முன்னாள் முதல்வர் கருணாதியின் பங்களிப்பை நினைவுகூர்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.




மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளையொட்டி அரசியல் தலைவர்கள் பலரும் அவரை நினைவு கூர்ந்து, புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், இது தொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், “ முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் 103 வது பிறந்தநாளில், தமிழ் மொழி, இலக்கியம், திரைத்துறை, அரசியல், ஆட்சி நிர்வாகம் மற்றும் மாநில உரிமைகள் போன்றவற்றில் அவரது பங்களிப்பை நினைவுகூர்கிறேன்.

அவருடைய பிறந்த நாளில் எனது மரியாதை கலந்த வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

## “அதிமுக அலுவலக சாவி பெருந்தன்மையுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது” விஜயபாஸ்கர்

புதுக்கோட்டை: ஜூன்.4-

பரபரப்பான செய்திகள் எதுவும் இல்லை. அதிமுக மாவட்ட அலுவலக சாவியை பெருந்தன்மையுடன் ஒப்படைத்துள்ளோம் என அதிமுக எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “பத்திரிக்கையின் பரபரப்புக்கும், ஊகங்களுக்கும் என்னால் எந்த செய்தியையும் சொல்ல முடியாது. அப்படி எந்த செய்தியும் இல்லை. நான் விராலிமலை சட்டப்பேரவைத் தொகுதியில் வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்ல சென்றிருந்தேன். அப்போது ஒன்றிய கழகச் செயலாளர்கள், மாநில கட்சியின் பொறுப்பாளர்களும் வழக்கம் போல என்னை சந்திக்க வந்தனர். அவர்களும் சில கருத்துக்களை முன்வைத்தனர். இது ஆலோசனை இல்லை.

விஜய பாஸ்கர் எனும் நான் 26 வயதில் இளம் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன். 2001ல் சட்டமன்ற உறுப்பினராகி, ஐந்து முறை தேர்தலில் நின்று, ஐந்து முறையும் மகத்தான வெற்றி பெற்றுள்ளேன். இம்முறை 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளேன். அதிமுக மாவட்ட அலுவலக சாவியை பெருந்தன்மையுடன் ஒப்படைத்துள்ளோம்.

5 நாட்களுக்கு பிறகு புதுக்கோட்டைக்கு வரும்போது, அனைவரும் ஆவலுடன் என்னை பார்க்க வருகிறார்கள். புதுக்கோட்டையின் வளர்ச்சிக்கு பல வகையில் துணை நின்றுள்ளேன்” இவ்வாறு அவர் கூறினார்.



# முதல்வரின் தனிப் பிரிவில் சிறப்பு மனுப்பெட்டி: பொதுமக்கள் இனி எளிதில் மனு அளிக்கலாம்

சென்னை, ஜூன்.4-
முதல்வரின் தனிப்பிரிவில் கோரிக்கை மனு அளிக்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், தலைமைச் செயலகத்துக்கு வெளியே சிறப்பு மனுப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது.சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வரின் தனிப் பிரிவில், பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை பதிவு செய்து வருகின்றனர்.தவெக ஆட்சிக்கு வந்தபின் மனு அளிக்க வரும் பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.குடிநீர், வீட்டுமனை பட்டா, வேலை



வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்கள் மனு அளித்து வருகின்றனர். இதனால், தலைமைச் செயலகத்தில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளது.இந்நிலையில், கூட்ட நெரிசலை தவிர்க்கவும், மனுக்களை எளிதாகப் பெறவும், தலைமைச் செயலகத்துக்கு வெளியே முதல்வரின் தனிப்பிரிவு சிறப்பு மனுப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.இதன் மூலம், தலைமைச் செயலகத்துக்கு வரும் பொதுமக்கள், தங்கள் கோரிக்கை மனுக்களை அந்தப் பெட்டியில் நேரடியாக செலுத்தலாம். அந்த மனுக்கள் உரிய பதிவுகளுடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கைக்காக பரிசீலிக்கப்படும்.அதே சமயம், அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு தர விரும்புபவர்கள் வழக்கம் போல் முதல்வரின் தனிப் பிரிவு அலுவலகம் வந்து மனுக்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அந்நியச் செலாவணியை பாதுகாக்க ரூ.1.15 லட்சம் கோடி தங்கம் விற்கப்பட்டதா? ரிசர்வ் வங்கி விளக்கம்

மும்பை, ஜூன்.4-
அந்நியச் செலாவணியை பாதுகாக்க ரூ.1.15 லட்சம் கோடி மதிப்புள்ள தங்கத்தை ரிசர்வ் வங்கி விற்பனை செய்திருக்கலாம் என வெளியான செய்தியை அது திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கையிருப்பு தங்கத்தை ரிசர்வ் வங்கி விற்றதாக சில பத்திரிகை மற்றும் ஊடகங்களில் வெளியான செய்தி உண்மையல்ல என்பதை ரிசர்வ் வங்கி வலியுறுத்திக் கூறுகிறது. தங்கத்தின் இருப்பு குறித்த விவரங்கள் ரிசர்வ் வங்கியின் மாதாந்திர செய்தி அறிக்கையில் வெளியிடப்படுகின்றன. அந்த செய்தி அறிக்கையை என்ற https://www.rbi.org.in/Scripts/BS_ViewBulletin.aspx?Id=24213 இணையத்தில் பார்த்து தெரிந்துகொள்ள முடியும். இன்றைய நிலவரப்படி தங்கத்தின் இருப்பு 880.52 டன்களாக மாறாமல் நீடிக்கிறது. எனவே இதுபோன்ற விஷயங்களில் ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் அதிகார




ப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்புமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
பின்னணி: உலகின் மூன்றாவது மிகப்பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதி நாடாக இந்தியா விளங்குகிறது. இந்நிலையில், மத்திய கிழக்கில் நிலவும் மோதல் போக்கு காரணமாக கடும் பொருளாதார நெருக்கடியை இந்தியா சந்தித்து வருகிறது. எரிபொருள் விலையேற்றம் மற்றும் உள்நாட்டு நாணய மதிப்பின் வீழ்ச்சி ஆகியவை இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்புக்கு பெரும் சவாலாக மாறியுள்ளன.இந்நிலையில், அந்நியச் செலாவணி வெளியேற்றத்தைக் குறைத்து, பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. அதன் ஒரு பகுதியாக, எரிபொருள் விலையேற்றம் மற்றும் விலை மதிப்புள்ள உலோகங்கள் மீதான இறக்குமதி வரி கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, கையிருப்பு தங்கத்தில் ஒரு பகுதியை ரிசர்வ் வங்கி விற்பனை செய்திருக்கலாம் என புளூம்பெர்க் எகனாமிக்ஸ் அமைப்பின் மூத்த இந்தியப் பொருளாதார நிபுணர் அபிஷேக் குப்தா குறிப்பிட்டிருந்தார். "மே 22ம் தேதியுடன் முடிவடைந்த 2 வாரங்களில், ரிசர்வ் வங்கி சுமார் 1,200 கோடி டாலர் மதிப்புள்ள தங்கத்தை விற்பனை செய்திருக்கலாம். இதன் மூலம், ரிசர்வ் வங்கி தனது அந்நியச் செலாவணி சொத்து மதிப்பில் சுமார் 750 கோடி வரை சேர்த்திருக்கலாம்" என்று அபிஷேக் குப்தா கூறி இருந்தார். இது குறித்த செய்தி பரவலாக செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் வெளியாகின. இந்நிலையில், இதனை ரிசர்வ் வங்கி திட்டவட்டமாக மறுத்துள்ளது.

# கோவை சிறுமி பாலியல் கொலை வழக்கில் கைதான இருவரை 3 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி

கோவை. ஜூன்.4-
கோவையைச் சேர்ந்த 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில், கைதான இருவரை மூன்று நாள் காவலில் விசாரிக்க போலீஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதைத் தொடர்ந்து போலீஸார் மூவரையும் ரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.
கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பதியின் 10 வயது மகள், கடந்த மாதம் 21ம் தேதி மாயமானார். மறுநாள் இரவு, கண்ணம்பாளையம் குளக்கரை பகுதியில் சடலமாக கிடந்தார். போலீஸாரின் விசாரணையில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டதும், சிறுமியின் பக்கத்து வீட்டில் வசித்து வந்த கார்த்தி (33) என்பவர் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததும் தெரியவந்தது. மேலும், இதற்கு அவரது நண்பர் மோகன் (30) என்பவர் உடந்தையாக இருந்ததும் தெரிந்தது. இதையடுத்து இருவரையும் போலீஸார் கைது செய்தனர். மோகன்ராஜ் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். போலீஸாரிடம் இருந்து தப்ப முயன்ற கார்த்தி, கீழே விழுந்ததில் கால்



முறிவு ஏற்பட்டு, கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.
சிகிச்சைக்கு பின் சிறைக்கு திரும்பிய அவரை சக கைதிகள் தாக்கியதால் மீண்டும் கார்த்தி கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மேலும், இருவரையும் குண்டர் தடுப்புப் பிரிவிலும் போலீஸார் கைது செய்தனர்.இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக கூடுதல் விவரங்களை பெற இருவரையும் காவலில் எடுத்து விசாரிக்க போலீஸார் முடிவு செய்தனர். அதைத் தொடர்ந்து சூலூர் போலீஸார், கடந்த 1ம் தேதி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள போக்சோ நீதிமன்றத்தில், இருவரையும் 5 நாட்கள் காவலில் விசாரிக்க அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்தனர். அந்த மனு விசாரணைக்கு வந்தது. நீதிபதி பகவதியம்மாள் விசாரித்தார்.
இதற்காக இன்று (ஜூன் 3) மதியம் மருத்துவமனையில் இருந்த கார்த்தி ஸ்ட்ரக்சரில் படுக்க வைத்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டார். சிறையில் இருந்து மோகனும் அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். தொடர்ந்து போலீஸாரிடமும், கைதான இருவரிடமும் விசாரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கார்த்தி, மோகன் ஆகியோரை 3 நாட்கள் காவலில் விசாரிக்க போலீஸாருக்கு நீதிபதி அனுமதித்தார். தொடர்ந்து சூலூர் போலீஸார் இருவரையும் பலத்த பாதுகாப்புடன் தங்களது கஸ்டடி விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இருவரையும் தங்களது இடத்தில் வைத்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.முன்னதாக, நேற்று (ஜூன் 2) மாலை சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதில், கார்த்தி, மோகன் ஆகியோரை நீதிபதி முன்னிலையில் 2 சாட்சிகள் அடையாளம் காட்டினர். விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை சாக்லெட் கொடுத்து அழைத்துச் சென்றதை பார்த்த ஒரு சாட்சி, வழித்தடத்தில் சிறுமியை கார்த்தி அழைத்து செல்வதை பார்த்த ஒரு சாட்சி ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களை அடையாளம் காட்டினர்.

# "பழனிசாமியை முதல்வர் விஜய் சந்திக்க நேரம் கேட்கப்பட்டதா?" கே.பி.முனுசாமி மறுப்பு

ஒசூர், ஜூன்.4-
"எந்த சூழ்நிலையிலும் முதல்வரோ, அவரது அலுவலகத்தில் இருந்தோ யாரும் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க நேரம் கேட்கவில்லை என்பதை தெளிவாக சொல்லிக் கொள்கிறேன்," என அதிமுகவின் துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "முதல்வர் விஜய் உழைத்து இந்த பதவிக்கு வரவில்லை. நடிப்பு தொழிலில் ஒரு மாயையை உருவாக்கினார். அந்த மாயத் தோற்றத்தை இன்ஸ்டாவிலும், ரீல்ஸிலும் காட்டினார். இளைஞர்கள் இப்படித்தான் நம் முதல்வர் இருப்பார் என்ற நம்பிக்கையில் வாக்களித்துள்ளார்கள். அவர்கள் மீது குற்றமில்லை. அந்த நம்பிக்கைக்கு உரியதாக அவர் செயல்பட வேண்டும்.



திருச்சியில் நடைபெற்ற நன்றி தெரிவிப்புக் கூட்டத்தில், சினிமாவில் எப்படி உணர்ச்சிகளை தூண்ட வேண்டுமோ, கொடுத்த டயலாக்கை பேச வேண்டுமோ, அதுபோலவே இந்த கூட்டத்திலும் 15 நிமிடம் பேசி முடித்துவிட்டார். அவர்கள் என்ன எழுதிக் கொடுத்தார்களோ, அதைப் படித்தார் அவ்வளவுதான். மக்கள் எதற்காக நமக்கு வாக்களித்தார்கள், மக்களுக்கு நாம் என்ன வாக்குறுதி கொடுத்தோம், அதன் அடிப்படையில் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு என்னென்ன திட்டங்களை நாம் கொண்டு வர இருக்கிறோம்; இது குறித்து சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு எடுக்கும்போதே சொல்லி இருக்க வேண்டும். அங்கு மவுனியாக இருந்தார்.
என்ன என்ன திட்டங்களை, தேவைகளை பிரதமர் மோடியிடம் கொண்டு செல்ல வேண்டுமோ அதை தயார் செய்துவிட்டு சென்றிருக்க வேண்டும். முதல்வருக்கும், பிரதமருக்கும் இடையே 10 நிமிடம் தான் உரையாடல் நடந்தது. அதில் 5 நிமிடங்கள் நலம் விசாரிப்பதில் முடிந்துவிடும்; மீதி உள்ள 5 நிமிடம் என்ன பேசி இருப்பார்கள்.நன்றி அறிவிப்பு கூட்டத்திலும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. முதல்வர் விஜய்க்கு சொந்த சிந்தனை கிடையாது; கொடுத்ததை படித்து விட்டார்.
எந்தக் கட்சியும் அழிந்து போகாது. ஒரே ஒரு தொண்டன் இருந்தாலும் அந்த கட்சி இருக்கும். அவன் கொள்கையோடு இருப்பான். கம்யூனிஸ்ட்டுகள் நூறு ஆண்டு காலம் இருக்கிறார்கள்; ஆட்சிக்கு வர முடியாது எனத் தெரிந்தும் கொள்கையை முன்னிறுத்தி இறுதி வரை போராடுவார்கள். அதுபோலத் தான் அதிமுகவும். இது விஜய்க்கு தெரியாது. அவர் சரக்கில்லாத முதல்வர்.
அமைச்சர் நிர்மல் குமார் தவறான தகவலை கூறியுள்ளார். ஏதோ ஒன்று சொல்ல வேண்டும் என சொல்கிறார். ஆனால் இப்படிச் சொன்னால் அவர் மாட்டிக் கொள்வார். பத்திரிகையாளர்களை சந்திக்கும்போது தேவையற்ற வார்த்தைகளை விடக் கூடாது. முதல்வர் விஜய், எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரை விமர்சிக்கவில்லை எனில், முதலில் அவர் யாரை சந்தித்திருக்க வேண்டும். அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தான் அவர் சந்தித்திருக்க வேண்டும். கடைசி வரை அவர் பார்க்கவில்லை.
எடப்பாடி பழனிசாமியை முதல்வர் விஜய் சந்திக்க நேரம் கேட்டும், அளிக்கப்படவில்லை என அமைச்சர் நிர்மல் குமார் கூறியுள்ளது முற்றிலும் தவறான செய்தி. எந்தச் சூழ்நிலையிலும் முதல்வரோ, அவரது அலுவலகத்தில் இருந்தோ யாரும் இபிஎஸ்ஐ சந்திக்க அனுமதி கேட்கவில்லை என்பதை தெளிவாக சொல்கிறேன்" என்றார்.

# தேனியில் நீர்தேக்கப் பகுதியில் பெய்து வரும் மழையால் நீர்வரத்து அதிகரிப்பு

ஆண்டிபட்டி, ஜூன்.4-
வைகை மற்றும் பெரியாறு அணைகளின் நீர்தேக்கப் பகுதியில் பெய்து வரும் மழையினால் நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. இது 5 மாவட்ட மக்களுக்கு நம்பிக்கையையும், ஆறுதலையும் ஏற்படுத்தி உள்ளது.வைகையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சில மாதங்களாக மழை இல்லாததால் நீர்வரத்து வெகுவாய் குறைந்தது. இந்நிலையில் பாசனம் மற்றும் குடிநீருக்காக நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டதால் நீர்மட்டம் சரிந்தது. மேலும் கடந்த மாதம் 20ம் தேதியில் இருந்து 29ம் தேதி வரை அணைக்கான நீர்வரத்து முற்றிலும் இல்லை. இது போன்ற காரணங்களால் 6 ஆயிரத்து 91 மில்லியன் கன அடி நீர் தேங்கக்கூடிய அணையில் கடந்த 29ம் தேதி வெறும் 111 மில்லியன் கன அடி நீரே தேங்கி நின்றது.இந்நிலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் கடந்த 30ம் தேதி முதல் நீர்வரத்து தொடங்கியது. ஆரம்பத்தில் விநாடிக்கு 96 கன அடி நீர் வந்த நிலையில் இதன்



அளவு சிறிது சிறிதாக அதிகரித்து நேற்று 116 கன அடியாகவும், நீர்மட்டம் 21.75 அடியாகவும் (மொத்த உயரம் 71) உயர்ந்தது.
வறண்ட அணைக்கு ஏற்பட்டுள்ள நீர்வரத்தும், மழைப் பொழிவும் விவசாயிகளுக்கு சற்று ஆறுதலை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் தேக்கடியில் நேற்று 29.4 மி.மீ, பெரியாறு அணையில் 19.2 மி.மீ, மழையும் பெய்துள்ளது. வைகை அணை பகுதியில் 13.2 மி.மீ, மஞ்சளாறு அணையில் 4 மி.மீ.மழையும் பதிவாகியுள்ளது.குறிப்பாக நீர்பிடிப்புப் பகுதிகளிலே மழைப்பொழிவு இருந்துள்ளது. அணைகளை மையப்படுத்தி பெய்து வரும் மழையினால் நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இது 5 மாவட்ட மக்களுக்கு நம்பிக்கையையும், ஆறுதலையும் ஏற்படுத்தியுள்ளது.இது குறித்து நீர்வளத் துறை அதிகாரிகள் கூறுகையில், தென் மேற்கு பருவ மழை இந்த ஆண்டு தாமதமாகி உள்ளது. கேரளாவில் நாளை(வியாழன்) பருவ மழை தொடங்குவதால் பெரியாறு அணைக்கு நீர்வரத்தும், தேனி மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரங்களில் மழைப் பொழிவும் இருக்கும். இதன் மூலம் அணைகளின் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது" என்றனர்.

# இந்தியநேபாள எல்லை விவகாரத்தில் சீனா, இங்கிலாந்து தலையீடா?

## பாலன் ஷா அழைப்பால் சர்ச்சை

காத்மாண்டு. ஜூன்.4-
நேபாள பிரதமர் பாலன் ஷாவின் சர்ச்சைக்குரிய பேச்சால் அந்நாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று முற்றிலுமாக முடங்கின. கடந்த 1816ம் ஆண்டு சுகவுலி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா நேபாளம் இடையே எல்லைகள் வரையறுக்கப்பட்டன. இதில் காலாபாணி, லிபுலேக் உள்ளிட்ட பகுதிகள் தொடர்பாக நீண்டகாலமாக பிரச்னை நீடித்து வருகிறது. இந்நிலையில், நேபாள பிரதமர் பாலன் ஷா, 'இந்தியா மட்டும் நேபாள நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை, நேபாளமும் பல இடங்களில் இந்திய நிலத்தை ஆக்கிரமித்துள்ளது' என்று கூறி புது குண்டைத் தூக்கிப் போட்டார்.இது அந்நாட்டின் இறையாண்மையை அடகு வைக்கும் செயல் என எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. சுமார் 98 சதவீத எல்லைப் பகுதிகள் ஏற்கனவே தீர்க்கப்பட்டுவிட்டதாக இந்திய தரப்பு தெரிவித்துள்ள நிலையில், பிரதமரின் இந்த பேச்சு இரு நாடுகளுக்கும் இடையே பெரும் சிக்கலை உருவாக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து நேற்று நேபாளி காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை முற்றிலுமாக முடக்கி அமளியில் ஈடுபட்டனர். பிரதமர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், அவரது பேச்சை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி கோஷமிட்டதால் அவையில் கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.இந்த பதற்றத்தை தணிக்க அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட விளக்கத்தில், 'பிரதமரின் கருத்து அரசின் கொள்கை மாற்றம் அல்ல; எல்லைப் பகுதிகளில் நடக்கும் விவசாயம் மற்றும் எல்லைத் தூண்கள் மாயமானது போன்ற தொழில்நுட்ப கோளாறுகளையே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்' என்று தெரிவித்தது. இதற்கிடையே சீனா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளை இப்பிரச்னையில் தலையிட பிரதமர் பாலன் ஷா அழைப்பு விடுத்த நிலையில், இந்தியா இதனைத் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. எல்லையில் தற்போது தீவிர கண்காணிப்பு மற்றும் அடையாள அணிவகுப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளன

# குவைத் விமான நிலையம் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் விமான சேவைகள் நிறுத்தம்

குவைத், ஜூன்.4-
ஈரான் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் குவைத் சர்வதேச விமான நிலையத்தின் 'டி1' கட்டிடத்தின் மீது இன்று அதிகாலையில் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்ததாக குவைத் அரசு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, குவைத் விமான நிலையத்தின் செயல்பாடுகள் இன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது குறித்து பேசிய குவைத் பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் சவுத் அப்துல் அஜிஸ் அல்ஒதைபி, "ஈரானின் பல ட்ரோன்கள் குவைத் சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் கட்டிடத்தை இலக்காகக் கொண்டு கடுமையாக தாக்கின. இந்தத் தாக்குதலில் கட்டிடம் கடுமையாகச் சேதமடைந்ததுடன், பல நபர்கள் காயமடைந்தனர்" என்று தெரிவித்தார்.



தங்கள் நாட்டின் கெஷ்ம் தீவின் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாக, அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் ஒரு அறிக்கையை வெளியிட்டது.முன்னதாக, குவைத்தை நோக்கி ஈரான் ஏவிய இரண்டு ஏவுகணைகள் பாதியிலேயே தாக்கி அழிக்கப்பட்டன என்றும், பஹ்ரைனை நோக்கி ஏவப்பட்ட மூன்று ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்பட்டன என்றும் அமெரிக்க ராணுவம் தெரிவித்திருந்தது. வளைகுடாவில் உள்ள தங்கள் நட்பு நாடுகள் மீது ஈரான் நடத்திய தொடர் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்துவிட்டதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்ததுடன், ஈரானின் கெஷ்ம் (Qeshm) தீவின் மீது தற்காப்புத் தாக்குதல்களையும் நடத்தியதாகவும் கூறியது. மேலும், பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படையின் ஐந்தாவது படைப்பிரிவின் தலைமையகத்தையும், அங்குள்ள மற்றொரு விமானத் தளத்தையும் தாக்கியதாக ஈரான் ராணுவம் வெளியிட்ட அறிவிப்பை அமெரிக்கா மறுத்துள்ளது.நெதன்யாகு மீது ட்ரம்ப் காட்டம்:
ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி இறுதியில் தாக்குதல் நடத்தின. இது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போராக வெடித்தது. இதையடுத்து, கடந்த ஏப்ரல் மாதம் போர் நிறுத்தம் அறிவித்த அமெரிக்கா, ஈரானுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில், லெபனான் மீது இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கோபம் அடைந்துள்ளார். இதன் எதிரொலியாக, சமீபத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் ட்ரம்ப் மேற்கொண்ட தொலைபேசி உரையாடல் கடும் வாக்குவாதமாக மாறியதாக அமெரிக்க ஊடகமான 'ஆக்ஸியோஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. தொலைபேசி உரையாடலின்போது நெதன்யாகுவை மிகக் காரசாரமான வார்த்தைகளால் திட்டிய ட்ரம்ப், அவர் நன்றி கெட்டவர் என்றும் சாடினார்.நெதன்யாகுவின் ஊழல் வழக்கைக் குறிப்பிட்டு, "நான் மட்டும் இல்லையென்றால் நீ இப்போது சிறையில் இருந்திருப்பாய். நான்தான் உன்னைக் காப்பாற்றுகிறேன். ஆனால், உன்னுடைய இந்த நடவடிக்கையால் இப்போது உலக நாடுகள் அனைத்தும் உன்னையும், இஸ்ரேலையும் வெறுக்கின்றன. நீ ஒரு பைத்தியக்காரன்" என்று ட்ரம்ப் ஆவேசமாகப் பேசினார். இந்தத் தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு, லெபனான் மீது பெரிய அளவிலான தாக்குதலை நடத்த வேண்டாம் என்ற தனது கோரிக்கையை நெதன்யாகு ஏற்றுக்கொண்டதாக ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

# “தவெக அரசின் அறிவிப்புக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லை” பிரேமலதா விமர்சனம்

விருத்தாசலம், ஜூன்.4-
“விவசாயிகள் யாரும் கடன் தள்ளுபடி அறிவிப்பை ஏற்கவில்லை. இது கண்துடைப்பு என போராட்டம் நடத்துகிறார்கள். அறிவிக்கப்பட்ட டாஸ்மாக் கடைகளை மூடாவிட்டால் அரசு மீதான நம்பிக்கை குறையும்” என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “மக்களின் தேவையை, எதிர்பார்ப்பை தவெக அரசு பூர்த்தி செய்ய வேண்டும். எனது விருத்தாசலம் தொகுதியை எடுத்துக் கொண்டாலே, மக்களுக்கு நிறைய செய்ய வேண்டியதாக உள்ளது. முதலில் விருதாச்சலத்தை மாவட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் யாரும் கடன் தள்ளுபடி அறிவிப்பை ஏற்கவில்லை. இது கண்துடைப்பு என போராட்டம் நடத்துகிறார்கள். இந்த அரசின் அறிவிப்புக்கும், தற்போது செய்வதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனச் சொல்கிறார்கள். போராட்டம் நடத்தும் விவசாயிகளை கைது செய்கிறார்கள். அவர்கள் தீவிரவாதிகளோ, தேச விரோத குற்றவாளிகளோ இல்லை. இது கண்டிக்கக் கூடிய விஷயம்.717 டாஸ்மாக் கடைகளை மூடுவதாக சொன்னார்கள். முதல்வர் சொன்னது போல மூடியிருக்கிறதா என ஆய்வு செய்ய வேண்டும். இல்லையென்றால் மக்கள் மத்தியில் நம்பிக்கை இல்லாமல் போய்விடும். தமிழகம் முழுவதும் வினாடிக்கு வினாடி, ஏதோ ஒரு மூலையில் பாலியல் வன்கொடுமை நடக்கிறது. இதை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். போதைக் கலாச்சாரத்தையும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்” என்று அவர் கூறினார்.

# “கர்நாடக துணை முதல்வராகிறார் ஜி.பரமேஸ்வரா” சித்தராமையா தகவல்

பெங்களூரு, ஜூன்.4-
கர்நாடக முதல்வராக டி.கே.சிவகுமார் இன்று பதவியேற்க உள்ள நிலையில், அவருடன் மாநிலத்தின் துணை முதல்வராக ஜி.பரமேஸ்வரா பதவியேற்க உள்ளதாக சித்தராமையா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “இன்று மாலை மாநிலத்தின் புதிய முதல்வராக பதவியேற்க உள்ள டி.கே.சிவகுமாரும், துணை முதல்வராக பதவியேற்க உள்ள ஜி.பரமேஸ்வராவும் என்னை சந்தித்து தங்கள் நன்றியை தெரிவித்தனர். இரு தலைவர்களுக்கும் நான் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்தேன்” என்றார்.



டி.கே.சிவகுமார் முதல்வராக பதவியேற்கும் விழா பெங்களூருவில் மக்கள் மாளிகையில் இன்று மாலை நடைபெற உள்ளது. இதில், காங்கிரஸ் தலைவர் கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். இன்றைய பதவியேற்பின்போது, சித்தராமையா அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த ஜி.பரமேஸ்வரா துணை முதல்வராக பதவியேற்க உள்ளார். மேலும், கே.ஹெச். முனியப்பா, கே.ஜே. ஜார்ஜ், எம்.பி.பாட்டீல், ராமலிங்க ரெட்டி, சத்தீஷ் ஜரகிஹோலி, கிருஷ்ணா பைரேகவுடா, பிரியங்க் கார்கே, யு.டி.காதர், ஈஸ்வர் கந்தரே, யதீந்திர சித்தராமையா, பைரதி சுரேஷ், ஷரண் பிரகாஷ் பாட்டீல் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்க உள்ளனர்.

# பொள்ளாச்சி ஜெயராமன் தாயார் மறைவுக்கு ஆறுதல் கூற வந்தபோது பழனிசாமி, வேலுமணி ஆதரவாளர்கள் கைகலப்பு

பொள்ளாச்சி, ஜூன்.4-
அதிமுக தேர்தல் பிரிவு செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பொள்ளாச்சி ஜெயராமனின் தாயார் சரஸ்வதி அம்மாள் கடந்த 15ம் தேதி காலமானார். இதையடுத்து, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, திப்பம்பட்டியில் உள்ள பொள்ளாச்சி ஜெயராமன் வீட்டு நேற்று வந்தார். அங்கு சரஸ்வதி அம்மாள் உருவப்படத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் கோவை புறநகர் தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் செ.ம.வேலுச்சாமி, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் அமைச்சர் செ.தாமோதரன், காங்கயம் சட்டப்பேரவை உறுப்பினர் என்எஸ்என் நடராஜ், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் சி.மகேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி வருவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு, தொண்டாமுத்தூர் எம்எல்ஏ எஸ்.பி.வேலுமணி வந்தார். அப்போது அங்கு கூடியிருந்த அதிமுகவினர் ‘துரோகி’ என கூச்சலிட்டனர். அவர்களை அதிமுக நிர்வாகிகள் அமைதிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து, அஞ்சலி செலுத்திவிட்டு, ஜெயராமனிடம் வீட்டுக்குள் பழனிசாமி பேசிக்கொண்டிருந்தார். அப்போது வேலுமணி, பழனிசாமி ஆதரவாளர்கள் ஒருவரையொருவர் தாக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்களை கிணத்துக்கடவு முன்னாள் எம்எல்ஏ தாமோதரன் உள்ளிட்டோர் சமாதானப்படுத்தினர்.

# அதிமுக மிகப்பெரிய பாதிப்பை சந்தித்துள்ளது: தலைவர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் செல்லூர் ராஜூ கருத்து

மதுரை, ஜூன்.4-
‘‘அதிமுக மிகப்பெரிய பாதிப்பை சந்தித்துள்ளது. எனவே தலைவர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும்’ என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.தீக்குளித்து உயிர் நீத்த அதிமுக நிர்வாகி பூக்கடை மகேந்திரனின் உருவப்படத்துக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி மதுரை அதிமுக சார்பில் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ தலைமையில் ஜான்ஸி ராணி பூங்கா முன்பு நடைபெற்றது. அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் செல்லூர் ராஜூ கூறியதாவது: உயிர்நீத்த பூக்கடை மகேந்திரனின் வீரமரணம் அதிமுக தொண்டர்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. அதிமுக இயக்கம் மிகப்பெரிய பாதிப்பை சந்தித்துள்ளது. அந்த பாதிப்புக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் தங்களை திருத்திக்கொண்டு பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். எம்ஜிஆர் என்ன நோக்கத்துக்காக இயக்கத்தை கண்டாரோ, அந்த நோக்கம் வெற்றியடைய வேண்டும். ஜெயலலிதா என்ன நோக்கத்துக்காக வளர்த்தெடுத்தாரே அந்த இயக்கம் வீறுகொண்டு எழ வேண்டும் என்ற அடிப்படையில் கட்சியின் ஒற்றுமை கருதி, பொதுச்செயலாளரின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மகேந்திரன் துயர முடிவை எடுத்திருக்கிறார். இந்த சம்பவத்தை ஒவ்வொருவரும் ஒரு படிப்பினையாகக் கொண்டு தலைவர் முதல் தொண்டர்கள் வரை உணர்ந்து செயல்பட வேண்டும். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் தன்னைப்பற்றி பேசியவர்களைக் கூட தாயுள்ளத்தோடு அரவணைத்துக் கொண்டனர். அதேபோல், இயக்கத்தின் வளர்ச்சிதான் ஒரே குறிக்கோள் என அதிமுக தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒவ்வொரு தலைவர்களும் நடந்துகொள்ள வேண்டும். மகேந்திரனின் மரணம் அதிமுக தொண்டர்களின் இறுதி மரணமாக இருக்க வேண்டும். கட்சி எழுச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக வெற்றிக்கழகம் ஆட்சியில் அமர்ந்து 23 நாள்களில் 64 கொலை சம்பவங்கள், 111 பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் நடந்துள்ளது என்றார் திமுக துணைப்பொதுச்செயலர் கனிமொழி எம்.பி. பேச்சு

புளியங்குடி, ஜூன்.4-
வாசுதேவநல்லூர் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் புளியங்குடியில் நேற்றுஇரவு வாசுதேவநல்லூர் சட்டப்பேரவை உறுப்பினர் ராஜா தலைமையில் நடைபெற்றது. நகர கிழக்கு பகுதி செயலாளர் அந்தோணிசாமி அனைவரையும் வரவேற்யார். பொதுக்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார் நகர மேற்கு பகுதி செயலாளர் நாகூர் ஹனி கருத்துரை வழங்கினார்




இதில் கனிமொழி எம்.பி. பேசியதுவாசுதேவநல்லூர் தொகுதியில் பாஜக பெரிய பின்புலத்தோடு களமாடிக் கொண்டிருக்கிறார்கள், அதை எதிர்த்து ராஜா போட்டியிட வேண்டும் என ஸ்டாலின் விரும்பினார். பாஜக வேட்பாளராக போட்டியிட்ட (ஆனந்தன்அய்யாசாமி) வேட்பாளர் பாதுகாப்புத்துறை அமைச்சரை அழைத்து வந்த பிரரம் செய்தார். அவருக்கு பின்புலமாக மிகப்பெரிய நிறுவனங்கள் எல்லாம் நின்று பணியாற்றியது. ஆனால் அத்தனையையும் தாண்டி ராஜா வெற்றி பெற்றுள்ளார்.நிச்சயமாக அவர் தொகுதிக்கு தேவையானதை செய்து தருவார். தமிழகத்தில் புதிய ஆட்சி பொறுப்பேற்று 23 நாள்கள் கடந்துவிட்டது . இந்த 23 நாள்களில் 64 கொலைச் சம்பவங்கள், பெண்களுக்கு எதிரான 111 பாலியல் வன்கொடுமைகள் நடந்துள்ளது. அதில் 61 சம்பவங்கள் குழந்தைகளுக்கு எதிரானது. இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்து கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே, ஆட்சி பொறுப்பில் இருப்பவர்கள் அந்த பிரச்னைகளை சரி செய்வது பற்றி கவலைப்பட வேண்டும். ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு, திமுகவை குறை சொல்லி வருகின்றனர். திமுக ஆட்சியில் இந்தியாவிலேயே பாதுகாப்பான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்தது. ஆனால் இன்று பெண்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. இதற்கான தீர்வுகளை அரசு தேட வேண்டும். சட்டம் ,ஒழுங்கைச் சரி செய்ய முயற்சிகள் எடுக்க வேண்டும். அதையெல்லாம் விட்டுவிட்டு வேறு யார் மீது பழி போடலாம் என்று காரணங்களைத் தேடிக் கொண்டிருந்தால், நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்கள் அதிக நாள் பொறுமையாகக் காத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.அதேபோல, விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வேன என்று சொன்னார்கள் ஆனால் செய்யவில்லை என்று கனிமொழி கூறினார். உடன் தென்காசி எம்பி ராணி ஸ்ரீகுமார் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், புளியங்குடி நகர மன்ற தலைவர் விஜயா . முன்னாள் எம்பி தங்கவேல் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, பொதுக்குழு உறுப்பினர வேல்சாமி பாண்டியன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் மைதீன், மாவட்டம் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் பொன்னுதுரைட்சி நகரத் துணைச் செயலாளர் கருப்புசாமி, காந்திமதி, சார்பு அணி நிர்வாகிகள் சேதுராமன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், நகர இளைஞரணி சதீஷ், இலக்கிய அணி ஜெகநாத பெருமாள், சுற்றுச்சூழல் அணி ராஜராஜன், ஏ ஆர் ஆர் அப்பா குட்டி அருணாசலம், குருராஜ், உட்பட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

# “தவெக பக்கம் செல்ல பெட்டி படுக்கையுடன் தயாராகிவிட்டார் வைகோ” மல்லை சத்யா

சென்னை, ஜூன்.4-
“தவெக பக்கம் செல்வதற்கு பெட்டி படுக்கையெல்லாம் கட்டி வைகோ தயாராக உள்ளதாகவே அவரின் பேச்சின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது” என மல்லை சத்யா தெரிவித்துள்ளார்.சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மல்லை சத்யா, “தவெக பக்கம் செல்வதற்கு பெட்டி படுக்கையெல்லாம் கட்டி வைகோ தயாராக உள்ளதாகவே அவரின் பேச்சின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. முதல்வர் விஜய்யை அண்ணாவுடன் வைகோ ஒப்பிட்டு பேசுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. திருச்சியில் பேசிய முதல்வர் விஜய், திமுகவுக்கும் தவெகவுக்கும் இடையில் தான் போட்டி என சொன்னார். மேலும், அல்லு சில்லுகளுக்கு இடமில்லை என சொன்னார், அதில் மதிமுகவும் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. திமுகவின் தயவால்தான் வைகோ



நாடாளுமன்றத்தில் 29 ஆண்டுகள் பணியாற்றினார். 24 ஆண்டு காலம் மாநிலங்களவையிலும், 5 ஆண்டு காலம் மக்களவையிலும் அவர் பணியாற்றினார் என்றால், திமுகதான் அந்த வாய்ப்பை பெற்று தந்தது. வைகோவின் மகன் இன்று திருச்சியில் மக்களவை உறுப்பினராக இருக்கிறார் என்றால், அதற்கும் திமுக தான் காரணம். சின்னப்பிள்ளை போன்று வைகோ பேசுவதை ஏற்க முடியாது. எங்கள் சின்னத்தில்தான் போட்டியிடுவோம், எங்களுக்கு இத்தனை தொகுதிகள் வேண்டும் என விசிக சொன்னது. இடதுசாரிகளும் அதே நிலைப்பாட்டை எடுத்தனர். உரிய தொகுதிகள் கிடைக்காததால், சுயமரியாதையோடு வெளியே நிற்கிறோம் என மக்கள் நீதி மய்யம் சொன்னது. ஆனால், சுயமரியாதை பற்றி வாய் கிழிய பேசும் வைகோ ஏன் அந்த பாதையை தேர்ந்தெடுக்காமல் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டார் என அவர்தான் சொல்லவேண்டும். அவருக்கு அழுத்தம் கொடுத்தது யார் என சொல்ல வேண்டும். ஒருவேளை இப்போது திமுக வெற்றி பெற்றிருந்தால், வைகோ என்ன பேச்சு பேசுவார் என எங்களுக்குத் தெரியும். கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் பல வாய்ப்புகளை பெற்று அவர் பயனடைந்தார் என்பதை மறுக்க முடியாது. இன்று திமுக ஆட்சியில் இல்லை என்பதால், அவதூறு பரப்புவதும், சேற்றை வாரி பூசுவதும், தவெகவை திராவிட வெற்றிக் கழகமாக நாங்கள் பார்க்கிறோம் என துரை வைகோ பேசுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது” என்று கூறினார்

# பருவகால பேரிடர்களை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை

## அமைச்சர் செங்கோட்டையன் தகவல்

சென்னை, ஜூன்.4-
தென்மேற்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் நேற்று நடந்தது. இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: தென்மேற்குப் பருவமழை தற்போது அந்த



மானில் ஒருவாரமாக பெய்துவருகிறது.வரும் நாட்களில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கேரளா, தமிழகப் பகுதிகளில் மழை பெய்ய இருக்கிறது. இதையடுத்து முன்னெச்சரிக்கையாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
பேரிடர் பணிகளை அரசுடன் இணைந்து செயல்படுத்த பல்வேறு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் மாவட்ட வாரியாக தயார் நிலையில் உள்ளனர். மத்திய அரசும் தேவையான உதவிகளை செய்யத் தயாராக உள்ளது. குறிப்பாக, கனமழை நேரங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் பணிகளைச் செய்ய இத்துறை விரைவாக செயலாற்றி வருகிறது.
அதனால் கனமழை போன்ற பேரிடர்களை எதிர்கொள்ள தயாராகவே இருக்கிறோம். இவ்வாறு அமைச்சர் செங்கோட்டையன் கூறினார்.

# தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவராக ரஞ்ஜீத் சிங், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (03.06.2026) பொறுப்பேற்றுக்கொண்டார்

தென்காசி, ஜூன்.4-
பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில், அனைவருக்கும் வணக்கம். நான் தென்காசி புதிய மாவட்ட ஆட்சியராக பதவியேற்றுள்ளேன். நான் 2016ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ் பிரிவை சேர்ந்தவன். இதற்கு முன்னதாக தேனி மாவட்ட ஆட்சியராக ஒரு வருடத்திற்கும் மேலாகப் பணியாற்றியுள்ளேன் ஆகவே, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முழு அர்ப்பணிப்புடன் (dedication) மக்களின் அனைத்து அடிப்படை வசதிகளுக்கு தீர்வு காணும் வகையில் பணியாற்றுவேன் அதேபோல், முன்னாள் மாவட்ட ஆட்சியருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் நல்ல முன்னெடுப்புகளை




நான் தொடர்ந்து முன்னெடுத்து செல்வேன். நிர்வாகக் கொள்கையில் மக்களுக்கான சேவை மற்றும் உடனடி பதிலளிக்கக்கூடிய (*People centric and responsive governance*) ஒரு நிர்வாகத்தை வழங்க முயற்சிப்பேன். பெரும்பாலான பிரச்சனைகள் சரியான நேரத்தில் பதில் கிடைக்காததாலேயே மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் வருகின்றன. ஆகவே, பொதுமக்கள் வழங்குகின்ற கோரிக்கை மனுக்களை குறிப்பிட்ட காலத்திற்குள் (run time) பணிகளை தீர்வு காண்பது மூலம் மக்கள் ஓரளவுக்குத் திருப்தியடைவார்கள். அணுகுமுறை எப்பொழுதும் மக்களை எளிதில் சந்திக்கும் வகையில் (approachable) இருக்கும். நான் அடிக்கடி நேரடியாகக் *கள ஆய்வுக்குச் செல்வேன்*. மக்கள் எப்போது வேண்டுமானாலும் என்னைத் தொடர்பு கொள்ளலாம், தொலைபேசியிலோ அல்லது நேரிலோ பார்க்கலாம் . அலுவலர்களுக்கும் உரிய சுதந்திரம் அளிக்கப்படும், அதே வேளையில் மக்களின் பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதில் அவர்களுக்குப் பொறுப்புணர்வும் (responsibility) இருக்க வேண்டும். ஏற்கனவே இருந்த ஆட்சியரிடம் சில விவரங்களைக் கேட்டுள்ளேன். மேலும், துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டத்திற்குப் பிறகு, எங்குப் பணிகள் நிலுவையில் உள்ளதோ (pendency) அதனைக் கண்டறிவதன் மூலம் முழுமையான தீர்வு கிடைக்கும். தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவராக ரஞ்ஜீத் சிங், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (03.06.2026) பொறுப்பேற்றுக்கொண்டார். தென்காசி மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் விவசாயம் சார்ந்த மாவட்டமாகும்* (Agrarian district). நான் ஏற்கனவே தேனி மாவட்டத்தில் பணியாற்றிய அனுபவம் இருப்பதால், விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்துவேன். விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கவும், அவர்கள் அளிக்கின்ற கோரிக்கை மனுக்களுக்கு பதில் கிடைப்பதை உறுதி செய்யவும் ஒரு சிறப்பான முறை (system) அமைக்கப்படும். தென்காசி மாவட்ட விவசாயிகளுக்காகவும், விவசாய முன்னேற்றத்திற்காகவும் முழுமையாக பணியாற்றுவேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., தெரிவித்தார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உடனிருந்தார்.

# மாணிக்கம்பட்டி கிராமத்தில் முத்தாலம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழா



அலங்காநல்லூர், ஜூன்.4-

மதுரைமாவட்டம் பாலமேடு அருகே உள்ள மாணிக்கம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்தாலம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது.இரண்டு நாட்கள் நடந்த இந்த யாகசாலை பூஜையில் மங்கல இசை முழங்க மகா கணபதி ஹோமம்,லட்சுமி ஹோமம், தன்வந்திரி யாகம்,நவகிரக ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வளம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க வானத்தில் கருடன் வட்டமிட கும்ப கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.பின்னர் தீபாராதனைகள், சிறப்பு அபிஷேகங்கள்,அலங்காரங்கள் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பூஜை மலர்களும்,பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை மாணிக்கம்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



# 15பி,மேட்டுப்பட்டி கிராமத்தில் முத்தாலம்மன்,காளியம்மன், திருக்கோவில் கும்பாபிஷேக விழா

அலங்காநல்லூர், ஜூன்.4-

மதுரைமாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள 15பி,மேட்டுப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்தாலம்மன், ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது. இரண்டு நாட்கள் நடந்த இந்த யாகசாலை பூஜையில் மங்கல இசை முழங்க மகா கணபதி ஹோமம்,லட்சுமி ஹோமம், தன்வந்திரி யாகம்,நவகிரக ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வளம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க வானத்தில் கருடன் வட்டமிட கும்ப கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.பின்னர் தீபாராதனைகள், சிறப்பு அபிஷேகங்கள்,அலங்காரங்கள் நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பூஜை மலர்களும்,பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை 15பி,மேட்டுப்பட்டி கிராம மரியாதைக்காரர்கள் மற்றும் திருப்பணிகுழுவினர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# அரசு மருத்துவமனையில் இளம் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த காவலர் புதுவையில் பரபரப்பு

புதுச்சேரி, ஜூன்.4-

புதுச்சேரி மாநிலம் திருக்கனூரில் அரசு மருத்துவமனையில் திருக்கனூர் காவல்நிலைய காவலர் ஒருவர் மதுபோதையில் மனநலம் பாதித்த இளம்பெண்ணை பலாத்காரம் செய்துள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்துள்ளது புதுச்சேரி வில்லியனூர் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்த காவலர் ஒருவர் திருக்கனூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார் நேற்று முன்தினம் நள்ளிரவு அந்தக் காவலர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார் அப்போது சாலையில் நடந்து சென்ற மனநலம் குன்றிய இளம்பெண தனது பைக்கில் ஏற்றிக்கொண்டு மண்ணாடிப்பட்டு சமுதாய நல வழி மையம் (அரசு மருத்துவமனை) அழைத்து சென்றுள்ளார் அங்கு பணியில் யாரும் இல்லாததால் அந்த இளம் பெண்ணை நோயாளிகள் அறையில் வைத்து வலுக்கட்டாயமாக காவலர் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது அப்போது திடீரென மருத்துவ அதிகாரி அந்த அறையில் உள்ளே வந்த போது மனநலம் குன்றிய இளம் பெண்ணை காவலர் பலாத்காரம் செய்ததை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார் உடனே அந்த காவலரை அரசு மருத்துவமனையில் இது போன்ற தவறாக நடந்து கொள்வது சரியா? என சரமாரியாக கேள்வி கேட்டுள்ளார் அதற்கு அவர் நான் போலீஸ் என்னையே கேள்வி கேட்கிறாயா? நான் அப்படிதான் செய்வேன் எனக் கூறியுள்ளார். அப்போது அந்த காவலர் மிகுந்த போதையில் இருந்ததாக கூறப்படுகிறது. உடனே காவலர் அந்த இளம் பெண்ணை அழைத்துக் கொண்டு மருத்துவமனையில் இருந்து வெளியே சென்று விட்டார் இதைக் குறித்து அந்த மருத்துவர் அதிகாரி திருக்கனூர் காவல் நிலையத்தில் புகார் செய்தபோது என்ன? கதை விடுகிர்களா? கனவு கண்டு போன் அடிக்கிறீங்களா? போங்க சார்...நேரத்தை வீணாக்காதீங்க...வையுங்க போனை என துண்டித்துள்ளனர் எனக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்படும் என கருதிய மருத்துவர் உடனடியாக மருத்துவ கண்காணிப்பாளரிடம் நடந்ததை தெரிவித்துள்ளார் அவரும் திருக்கனூர் போலீசாரிடம் புகார் செய்தபோது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை இதனால் மருத்துவ கண்காணிப்பாளர் உடனே காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு இ மெயில் மூலமாக புகார் அனுப்பியுள்ளார் இந்த தகவல் வெளியே தெரிந்தால் புதுவை காவல்துறைக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடும் என்று கருதி இரவோடு இரவாக அந்த காவலரை 800 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஏனாம் ஆயுதப்படைக்கு பணி இடமாற்றம் செய்து காவல்துறை தலைமையாக எஸ் பி மோகன் குமார் உத்தரவிட்டுள்ளார் இது குறித்து எஸ் பி மோகன்குமாரிடம் கேட்ட போது காவலர் காவல் நிலையத்துக்கு புகார் கொடுக்க வரும் பொதுமக்களிடம் கண்ணியக்குறைவாக நடந்து கொள்கிறார்.மேலும் காவல்துறை உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை கீழ்படிவதில்லை. மதிப்பதில்லை புகாரை திருக்கனூர் இன்ஸ்பெக்டர் காவல்துறை தலைமையை கத்துக்கு அனுப்பினர். அதன் பேரில் அந்தக் காவலர் பணியிட மாற்றம் செய்யப்பட்டார் சம்பந்தப்பட்ட காவலர் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படும் தகவல் புதிதாக உள்ளது இது தொடர்பாக உயரதிகாரிக்கு தகவல் தெரிவிக்கிறோம்.என்றார் புதுச்சேரி காவல்துறையில் பணிபுரியும் காவலர் அரசு மருத்துவமனையில் இளம் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்துள்ள சம்பவம் புதுவையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தியாகதுருகத்தில் திரண்ட தமிழ்ச் சான்றோர்கள்! பாரதியார் தமிழ்ச் சங்கம் நடத்திய பிரம்மாண்ட ஐம்பெரு விழா!



கள்ளக்குறிச்சி, ஜூன்.4-

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகத்தில், பாரதியார் தமிழ்ச் சங்கம் சார்பில் பிரம்மாண்ட ஐம்பெரு விழா நடைபெற்றது. தமிழறிஞர் ராபர்ட் கால்டுவெல் பிறந்தநாள், சர்வதேச அன்னையர் நாள், சர்வதேச செவிலியர் நாள், தொழிலாளர் நாள் மற்றும் குடும்ப நாள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, தமிழ் இலக்கியத் தொடர் சொற்பொழிவுடன் இவ்விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.வாசவி மெட்ரிக் பள்ளி ஆசிரியை அ.தமிழரசி தலைமையில், ஆசிரியை க.விஜயகுமாரி, நூலகர் கலைமகள் காயத்ரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் ராபர்ட் கால்டுவெல்லின் தமிழ்த்தொண்டு, தொழிலாளர் நாள், அன்னையர் நாள், சர்வதேச குடும்ப நாள் (பேசியவர்கள்: ஆசிரியர் து.திலகவதி, முனைவர் ம. கவிதா) மற்றும் திருக்குறள் உரை குறித்துப் பல்வேறு சிந்தனையாளர்களும், தமிழறிஞர்களும் காரசாரமாகவும் நெகிழ்ச்சியாகவும் உரையாற்றினர். மேலும், தமிழாசிரியர் ஆ. ராமானுஜம் தலைமையில் "அன்னையைப் போற்றுவோம்" என்ற தலைப்பில் கவியரங்கமும் நடைபெற்றது.சிறப்பு அழைப்பாளராக அகவை முதிர்ந்த தமிழறிஞர் நலச்சங்க மாநில துணைத் தலைவர் சோளிங்கர் த.பழனி கலந்துகொண்டு, சிறப்பிடம் பெற்ற மாணவர்கள் மற்றும் சிறந்த தமிழறிஞர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார். தமிழ்ச் சான்றோர் இரா. பொன்னப்பிள்ளை, ரிஷிவந்தியம் அரசு கலைக் கல்லூரி உதவி பேராசிரியர் மாரி.செல்வராசு, தமிழ்ச் சங்கப் புரவலர் சீனு.முரளி, ரிஷிவந்தியம் தமிழ்ச் சங்க நிறுவனர் வ. ராசாகோபால் உட்படப் பலர் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினர். நிறைவாகப் பாரதியார் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் இரா.துரைமுருகன் நன்றி கூறினார்.*சக்கர வியூகம் வாய்ஸ்:*மேலைநாட்டிலிருந்து வந்து தமிழுக்குத் தொண்டாற்றிய ராபர்ட் கால்டுவெல் முதல் நம்மைப் பெற்றெடுத்த அன்னை, உழைக்கும் வர்க்கம், நம் உயிர் காக்கும் செவிலியர்கள் மற்றும் குடும்ப அமைப்பைப் போற்றும் விதமாக ஐந்து விழாக்களையும் ஒரே மேடையில் அர்த்தமுள்ளதாக மாற்றிய தியாகதுருகம் பாரதியார் தமிழ்ச் சங்கத்தின் முயற்சி அற்புதம்! தமிழ் அறிஞர்களையும், கல்லூரிப் பேராசிரியர்களையும் கௌரவிப்பதோடு, அடுத்த தலைமுறை மாணவர்களையும் விருதுகள் வழங்கி ஊக்குவித்திருப்பது பாராட்டுக்குரியது. இந்த இலக்கியப் பணிகள் தியாகதுருக மண்ணில் இன்னும் தொடர வேண்டும் என்பதே சக்கர வியூகத்தின் கறாரான பார்வை.

# பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க நடவடிக்கை: டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் உறுதி



சென்னை, ஜூன்.4-

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்றார் மகேஷ் குமார் அகர்வால். பின்னர், அவர், "போதைப் பொருட்கள் கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க இருக்கின்றோம்" என தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப் பெருங்கட்சியாக உருவெடுத்த நிலையில், தற்போது கூட்டணி ஆட்சிதான் நடந்து வருகிறது. புதிய ஆட்சி அமையும் முன்னர் தேர்தலை ஒட்டி தேர்தல் ஆணையம் தமிழக டிஜிபி, தலைமைச் செயலர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் இருந்த அதிகாரிகளை மாற்றம் செய்தது.இந்நிலையில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு டிஜிபியாக மகேஷ் குமார் அகர்வால் நியமிக்கப்பட்டார். அவர் இன்று தமிழக டிஜிபியாக பொறுப்பேற்றார். அவருக்கு பூங்கொத்து கொடுத்து, காவல் துறை அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.முன்னதாக, சட்டம் ஒழுங்கு டிஜிபியாக தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர், சிறைத் துறை டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் மகேஷ்குமார் அகர்வால் கூறும்போது, "தமிழக மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி. முதல்வர் விஜய் மற்றும் தமிழக மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.தமிழகத்தில் போதைப் பொருட்கள் கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க இருக்கின்றோம். தமிழக காவல் துறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.யார் இந்த மகேஷ்குமார் அகர்வால்?கடந்த 1994ம் ஆண்டு தமிழக பேட்ச் ஐபிஎஸ் அதிகாரியான மகேஷ்குமார் அகர்வால் பஞ்சாப் மாநிலம் பதிந்தா பகுதியைச் சேர்ந்தவர். சட்டம் பயின்றவர். 22 வயதிலேயே ஐபிஎஸ் அதிகாரியானார். தமிழ், இந்தி, ஆங்கிலம், பஞ்சாப் மொழியில் சரளமாக பேசக்கூடியவர். தேனி, தூத்துக்குடி மாவட்டங்களின் எஸ்.பி., சென்னை பூக்கடை துணை ஆணையர், சென்னை போக்குவரத்து காவல் தெற்கு துணை ஆணையர் எனப் பொறுப்பு வகித்தார்.பின்னர் 7 ஆண்டுகள் சிபிஐ அதிகாரியாக பஞ்சாப், ஹரியானா, ஜம்மு காஷ்மீரில் பணியாற்றினார். தொடர்ந்து ஐஜியாகப் பதவி உயர்வுபெற்று தமிழகம் திரும்பி சிபிசிஐடி ஐஜியாகப் பதவி வகித்தார். மேலும் அவர் மதுரை காவல் ஆணையரானார். மீண்டும் சிபிசிஐடி ஐஜி ஆனார். பின்னர் சென்னை தெற்கு கூடுதல் ஆணையராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து செயலாக்கப் பிரிவு ஏடிஜிபியாக இருந்த மகேஷ்குமார் 2020ம் ஆண்டு சென்னை காவல் ஆணையராக பொறுப்பேற்றார். பின்னர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சிஐடி கூடுதல் டிஜிபியாக இருந்தார். அதன் பின்னர் அயல்பணியாக டெல்லி சென்ற அவர், தற்போது தமிழக டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். சிறந்த பணிக்கான குடியரசுத் தலைவர் பதக்கத்தையும், பொது சேவையில் சிறந்து விளங்கியதற்காக முதல்வர் பதக்கத்தையும் வென்ற இவர் சிபிஐ, சிபிசிஐடி உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளிலும் திறம்பட செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி கடையாலுருட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நியாய விலைக் கடை, அங்கன் வாடி அலுவலகங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் வண்ணப் புகைப்படம் பொருத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்நிகழ்வில் மேல நீலிதநல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அந்தோனி திலக், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுரேஷ், கடையாலுருட்டி கிளை செயலாளர் சபரிநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புகைப்படம் அரசு அலுவலகங்களில் பொருத்தப்பட்டதை முன்னிட்டு, கலந்து கொண்ட அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்ததுடன், நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.10 சுகாதார பிரிவு வார்டு அலுவலகத்தில் ஆணையாளர் திரு.கௌரவ் குமார், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் துணை ஆணையாளர் திரு.ராஜாராம் அவர்கள், மாநகர் நல அலுவலர் மரு.அர்விந்த் ஜோதி அவர்கள், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

# கோடை வெயில் எதிரொலி: நாடு முழுவதும் மே மாத மின் நுகர்வு 11% உயர்வு

புதுடெல்லி, ஜூன்.4-

நாடு முழுவதும் கடந்த மே மாதம் முழுவதும் நிலவிய கடுமையான கோடை வெயில் காரணமாக, மின்சார நுகர்வு சுமார் 11% அதிகரித்துள்ளது.வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் ஏசி பயன்பாடு பெருமளவு உயர்ந்ததே இதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது. கிரிட் இந்தியா அமைப்பின் புள்ளிவிவரங்களில், ''கடந்த ஆண்டு மே மாதத்தில் 148.7 பில்லியன் யூனிட்டுகளாக இருந்த மின் நுகர்வு, இந்த ஆண்டு மே மாதத்தில் 11% உயர்ந்து 165 பில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது.இது கடந்த ஏப்ரல் மாதத்தின் மின் நுகர்வான 154 பில்லியன் யூனிட்டுகளுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்திற்கும் அதிகமாகும்'' என கூறப்பட்டுள்ளது.இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கூற்றுப்படி, கடந்த மே மாதத்தின் பிற்பாதியில் வழக்கத்தை விட வெயிலின் தாக்கம் மிக அதிகமாக இருந்ததால், மின்சாரத்திற்கான தேவையும் உயர்ந்தது.மே 11ம் தேதி முதல் அதிகரிக்கத் தொடங்கிய மின் தேவை, அடுத்தடுத்த 4 நாட்களுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவைத் தாண்டியது. குறிப்பாக, மே 21ம் தேதி வரலாற்றிலேயே மிக அதிகபட்சமாக 270.8 கிகாவாட் என்ற புதிய உச்சத்தைத் தொட்டது. எனினும், மாதத்தின் இறுதிக்கட்டப் பகுதியில் மின் தேவை படிப்படியாகக் குறைந்தது.




**உயர்திரு. ஆணையாளர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி.**
**ந.க.எண்: எச்1/ 01419 / 2025**

ஆனந்தி (வயது45)
க/பெ.நஞ்சப்பன் (வயது 55)
822/10K,போயம்பாளையம் பிரிவு,
பிச்சம் பாளையம் புதூர்,
P.N.ரோடு,
திருப்பூர் 641601

மனுதாரர்....

அறிவிப்பு

மேற்படி நம்பரில் மனுதாரர் திருமதி ஆனந்தி க/பெ. நஞ்சப்பன் அவர்கள் தமது தந்தை திரு. லிங்கசாமி த/பெ.பழனிச்சாமி அவர்கள் 02.04.2017 அன்று 822/10K போயம்பாளையம் பிரிவு, பிச்சம்பாளையம் புதூர் பி.என்.ரோடு, திருப்பூர் 641601 முகவரியில் இறந்ததை, எதிர்மனுதாரர் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி உயர்திரு. ஆணையாளர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி மனுத்தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் சமூக நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

**ஆனந்தி**
**மனுதாரர்**

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000